விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 2 இதழ் 227
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19 - 09 1995

## ★ அரசுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்த முஸ்தீபு

(கொழும்பு)

அரச திணைக்களங்கள் பொதுத்துறைகளை தனியார் மயமாக்கும் திட்டம் குறித்து அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருந்ததை விரும்பாத தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளன.

அரசு தமது 5 அம்ச கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லையெனில் சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் இறங்குவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து ரயில் மற்றும் தொலைத் தொடர்புகள் உட்பட 60 பொதுத்துறைகள் இவ் வேலை நிறுத்தத்தில் இறங்க திட்டமிட்டு இருப்பதால் மக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிப்புறும் என பார்வையாளர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ரயில்வே ஊழியர்கள் நேற்றிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

கே-ரி

## வேலை நிறுத்தத்தினால் றெயில்வே ஸ்தம்பிதம்

(கொழும்பு)

இலங்கை புகையிரத பகுதியின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்தம் காரணமாக, நேற்று புகையிரத சேவை ஸ்தம்பிதமடைந்தது.

இந்த வேலை நிறுத்தத்தால் அரச தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் போக்குவரத்து பெரிதும் பாதிப்புற்றது.

புகையிரத போக்குவரத்து சேவையை ஈடுசெய்யும் வகையில் பஸ் சேவைகள்

(6ம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளின் பலத்தை அறிவதற்கு 'ராடர்' கருவிகளைப் பெற அரசுக்கு இராணுவம் அவசரக் கோரிக்கை

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப்புலிகளின் படைபலத்தை கண்டறிவதற்கு 'ராடர்' கருவிகளைப் பெற்றுத்தருமாறு இராணுவத்தினர் அரசிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிப் போராளிகளுக்கு எதிராக ஆயுதப் போரை கடுமையாக்கும் திட்டத்தில் இராணுவம் தீவிரமாக இறங்கியுள்ளதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளை அறிந்துகொள்ள உதவும் ராடர் எனப்படும் தொலைநிலை இயக்கமானிக் கருவிகள் மூலம் புலிகளின் பீரங்கி படைகளையும் கப்பல் படை பலத்தையும் கண்டறிவதற்காக அரசு தங்களுக்கு 'ராடர்' கருவிகளை வாங்கித் தரவேண்டும் என்று இராணுவம் அரசுக்கு வேண்டுகோள்

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் படை பலத்தை கண்டறிவது ராணுவத்துக்கு கடினமாக இருக்கிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தங்களது பீரங்கி படையணியை அடிக்கடி இடம்பெயரச் செய்வதால் விடுதலைப் புலிகளின் படைபலத்தை கண்டறிவது கடினமாக உள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் ''கைகுலுக்கல்'' என்னும் இராணுவ நடவடிக்கையின் 2-வது கட்டத்தின் நோக்கமானது விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து பலாலி விமான தளத்தை காப்பாற்றுவதும் விடுதலைப் புலிகளின் பீரங்கி

(6ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமிலிருந்து தொடர்ந்து ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்றுகாலையும் வலிகாமம்பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

மக்கள் இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்திருப்பதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் பொது மக்களின் குடிமனைகள் பல சேதப்பட்டுள்ளன.

புன்னாலைகட்டுவன், ஊரெழு, சுன்னாகம், மல்லாகம், சிறுப்பிட்டி, ஈவினை பகுதிகளில் ஷெல்கள் நேற்றும் வந்து வீழ்ந்து வெடித்தன.

170- ரி

## திலீபன் நினைவுதினம் உணர்வுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தின் நாலாம் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். குடாநாடு பூராகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

காலையில் வழமைபோல் மக்கள் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்திவிட்டு தமது நாளாந்த கடமைகளில் ஈடுபட்டனர்

சிரமதானங்கள் அடையாள உண்ணா விரத நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர் ஆலயங்களில் விசேட பூசைகள், ஆராதனைகளும் தியாகி

(6ம் பக்கம் பார்க்க)



[யாழ். பல்கலைக்கழக 15வது பட்டமளிப்பு விழாவின்போது துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதையும் அவர் பட்டம் வழங்க தயாராயிருப்பதையும் படங்களில் காணலாம்]

## 87 ஐரிஸ் மோனா பயணிகள் தீவகத்திற்கு செல்வர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்துவரும் ஐரிஸ் மோனாக்கப்பலின் 87 பயணிகள் இன்று முதல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் தீவகப் பகுதிகளுக்கு அனுப்படவுள்ளனர்.

இரு தொகுதிகளாக மேற்படி பயணிகள் தீவகப் பகுதிகளுக்குச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

முதல்தொகுதி பயணிகள் 45 பேர் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து விடுதலைப்புலிகளால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள். பின்பு இவர்கள் ஹபரண கப்பலில் தீவகப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்

(6ம் பக்கம் பார்க்க)

எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும்.
இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது

- தியாகி திலீபன்

(எ-5303) தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## வரி விளம்பரம்

### ரி, வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் I C., அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனு, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற வகைகளையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்: அன்ரனு பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ் 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-5245)

### வெளிவந்துவிட்டது

க.பொ.த (உ/த) G.C.E: (A/L) புதிய பாடத் திட்டத்திற்கு அமைய சங்க காலம் தொடக்கம் இக்காலம் வரையும் "செய்யுட் கோவை", ஆக்கம்: பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே) கிடைக்குமிடம் ஸ்ரீ சுப்பிரமணியம் பொத்தகசாலை, 235, காங்கேசன் துறை சாலை, யாழ்ப்பாணம்.

(எ-5314)


# தியாகி திலிபன் நினைவாக பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 8ம் அண்டு நினைவு நாள் நினைவுகள் குடாநாடு பூராகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கட்டட்டு வருகிறது.

குடாநாட்டில் பல பகுதிகளிலும் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு எழுச்சிகீதங்கள் இசைக்கப்படுகின்றன. பல்வேறு இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன 162

### அலங்காரப் பந்தல்

(அரியாலை)

தியாகி திலீபனின் 8ம் ஆண்டு நினைவை யொட்டி யாழ். ஆரியகுளம் சந்தி பட்டம் சந்தி யாழ். புகையிரத நிலைய முன்றல் ஆகியவற்றில் வர்ண அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ் மத்திய பஸ்நிலையம் சிவப்பு மஞ்சள் கொடிகளினுல் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

யாழ் நகரில் வீட்டுக்கு வீடு வாசல்களில் தியாகி திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

### சிரமதானப்பணி

யாழ். நகரில் சனசமூக நிலையங்களின் முன்றல்கள் வீதிகள் ஆகியன மக்களால் சிரமதானப்பணி மூலம் துப்பரவு செய்யப்படுகின்றன 59

### தென்மராட்சியில்

(சாவகச்சேரி)

தியாகி திலீபனின் 8ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி சாவகச்சேரி வட்ட அவை ரீதியில் நுணாவில் மணங்குணாய் பகுதியில் மிகவும் பிரமாண்டமான அலங்காரக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

இது தவிர வட்ட அவை ரீதியில் பளை. கொடிகாமம் கைதடி. ஆகிய பகுதிகளிலும் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு இம்முறை தியாகி திலீபனின் நினைவுதின நிகழ்வுகள் எழுச்சி பூர்வமாக நடைபெறுகின்றது. இப்பகுதி எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டுவருகின்றது. 155

### வடமராட்சியில்

(வடமராட்சி)

வடமராட்சி எங்கும் தியாகி திலீபனின் நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது

வடமராட்சியின் பல பாகங்களிலும் பாடசாலைகள், பொதுஸ்தாபனங்கள் அரசாங்க திணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்திலும் திலீபனின் உருவப்படங்களுக்கு மலர் மாலை சூட்டி பந்தல் அனைத்தும் அவரது நினைவுப் பாடல்கள் ஒலிபரப்பப் படுகிறது. 51

### நாகர் கோவிலில்

(தாளையடி)

தியாகி திலீபனின் 8ம் ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் வடமராட்சி கிழக்குப் பகுதியெங்கும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. நாகர் கோவிலில் 60 அடி நீளமான பந்தல் ஒன்று அமைக்கப்பட்டு சிவப்பு மஞ்சள் நீல நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

வீதிகள் எங்கும் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளது. அரசஸ்தாபனங்கள், பொதுஸ்தாபனங்களில் பந்தல் அமைக்கப்பட்டு தியாகி திலீபனின் படம் வைக்கப்பட்டு விளக்கேற்றப்பட்டுள்ளன. 163

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டத்தில் தியாகி திலீபனின் நினைவு நாள் அஞ்சலி நிகழ்வுகள் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய முன்றலில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்ஆலயத்தில் 3ம் நாள் நிகழ்வான நேற்றுக் காலை வடமராட்சி அரசியல் துறையைச் சேர்ந்த திரு. பாரிமகன் ஈகைச்சுடரை ஏற்றினுர். தமிழீழ மாவீரர் பணிமனையைச் சேர்ந்த திரு. இனியவன் திலீபனின் திரு உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார். 160

# தியாகி திலீபன் நினைவாக இன்று உண்ணுவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் 8வது ஆண்டு நினைவாக யாழ் மாவட்ட ரீதியில் இன்று 19ம் திகதி நடைபெறும் உண்ணுவிரதங்கள் பற்றிய விபரங்கள்

வலிகாமம்- யாழ் மாவட்டம்: நகைத்தொழிலாளர் சங்கம் அத்தியடி மக்கள்

சண்டிலிப்பாய்: கடற்றொழிலாளர் சங்கம்இடம்பெயர்ந்தோர் முகாம், ஆனைக்கோட்டை நவாலி மக்கள்.

தீவகக்கோட்டம் :(நல்லூர்) லவனிதா குடியிருப்பு மக்கள் யா-தம்பாட்டி அ. த, க பாடசாலை. வேலணை ப. நோ. கூ. சங்கம்

தென்மராட்சி: (கைதடி) யாழ் கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி சரஸ்வதி ச, ச நிலையம் கைதடி பாரதி சமூக நிலையம் கைதடி மேற்கு சமூக நிலையம்

(சாவகச்சேரி) மீசாலை மேற்கு மீசாலை கிழக்கு மக்கள் நுணாவில் மக்கள் அறவழி ஊழியர்கள்

(கொடிகாமம்-) சதீஸ் இளங்கோ நாவற்காடு புனேவேலி மருதடி கலைவாணி கணேசா ச.ச நிலையங்கள்

(பளை) புலோப்பளை சிற்றூர் மக்கள் ச:ச நிலையம்.

வடமராட்சி (உடுப்பிட்டி) வல்வெட்டிகருணாநிதி தென்னவன் சமூக நிலைய உறுப்பினர்கள் மக்கள் வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.

(கரவெட்டி) கரவெட்டி கிழக்கு சிற்றூர் மக்கள்

தியாகி திலீபனின் 8வது ஆண்டு நினைவாக கடற் புலிகளின் யாழ் மாவட்ட பிரதேசங்கள் வட்டரீதியாக நாகர் கோவிலில் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணுவிரத நிகழ்வுகளில் இன்றைய தினம் ராஜன் நகர் அம்பன் மக்கள் கலந்து கொள்வர்.

தியாகி திலீபனின் 8வது ஆண்டு நினைவாக இன்று கோட்ட மட்டத்தில் மாணவர் அமைப்பினுல் மேற்கொள்ளப்பட்ட உண்ணுவிரத நிகழ்வில் பருத்தித்துறையில் மெதடிஸ் பெண்கள் உயர்தரக் கல்லூரி வடஇந்து மகளிர் கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்வர்.

## கொப்பிகள் விலையுயர்வு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் தற்போது கடதாசி வகைகள் கொப்பிகள் விலைகள் அதிகரித்து வருகின்றன. அதனுல் பாடசாலை மாணவர்கள், பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். -154


## கண்டெடுக்கப்பட்டது

கே: சிறீபரன் (மாணவன்) கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம் என்பவருடைய பாடசாலை அட்டை மோசஸ் ராஜகுமார் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.


## வைத்தியசாலை இடமாற்றம்

(வட்டுக்கோட்டை)

சங்கானை அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு தற்போது ஆனைக்கோட்டை சந்திக்கருகாமையில் இயங்கி வருகின்றது.

ஸ்ரீலங்கா படையினரின் இராணுவ நடவடிக்கைகளை அடுத்தே இந்த வைத்தியசாலை ஆனைக்கோட்டையில் உள்ள தனியார் வீடு ஒன்றில் நடாத்தப்படுகிறது. -139

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—09—19

செவ்வாய் இரவு

- 8-02 தியாகி லெப். கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவாக சிறப்புநிகழ்ச்சி -'மக்களை நேசித்தாய் மலைபோல் உயர்ந்தாய்'
- 8-20 நலந்தானு நிகழ்ச்சியில் மருந்துகள் என்பன பிரயோசனமான நஞ்சுகள் பற்றி வைத்தியக்குறிப்புகள்
- 8-30 செய்திகள்
- 8-40 கருத்துக்களம்-இ: இராஜேஸ்வரன் எழுதிய 'மதடுதல்'
- 8-50 மலரும் மொட்டும்

1995—09—20

புதன் காலை

- 7-02 மாவீரவணக்கம்
- 7-15 நீங்கள் கேட்டவை
- 7-30 செய்திகள்
- 7-35 பத்திரிகைச்செய்திகள்
- 8-00 மணிவரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995—09—19

செவ்வாய் மாலை

- 5-01 சிந்தனைச்சிதறல்
- 5-02 எழுச்சிகீதம்
- 5-10 புதியவை
- 5-15 தமிழிசை
- 5-30 வானொலி மஞ்சூகம்-36
- 6-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
- 6-02 என் தெரிவு
- 6-10 செய்திகள்
- 6-15 விளையாட்டுச் செய்திகள்
- 6-20 இவ்வாரம் இவர்

# லஞ்சம் வாங்கியதாக சுங்க அதிகாரி கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரி ஒருவர் லஞ்சம் வாங்கியமை தொடர்பான குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டு தற்போது விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கசற் றெக்கோடர் ஒன்று வரி செலுத்தாமல் இலங்கைக்குக் கொண்டு வருமுகமாக ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றதாக இவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

கொழும்பு கிருலப்பனையைச் சேர்ந்த ஒருவர் செய்த புகாரையடுத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. -ஏ

# கடும்காற்றினுல் வாழைகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், நீர்வேலிப்பகுதிகளில் அண்மையில் வீசிய கடும் காற்றினுல் அங்குள்ள வாழைகள் அதிகளவில் முறிந்து விழுந்துள்ளன. இதனுல் இப்பகுதிகளில் வாழைச்செய்கையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாழைத் தோட்டங்களில் அதிக அளவில் சேதமேற்பட்டதைத் தொடர்ந்து வாழைப் பழத்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனுல் வாழைப்பழத்தின் விலை அதிகரித்துள்ளது. சந்தைகளில் ஒரு கிலோ வாழைப் பழம் 30 ரூபாவிலிருந்து 35 ரூபாவரை விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகுறது. 162


## அறிவித்தல்

### விதை உருளைக்கிழங்கு முற்பண அறவீடு

1995 / 96 காலபோகத்திற்கென ஹொலண்ட் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கும் 150 மெ. தொன் விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள விவசாயிகள் இக்கிழங்கைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவாக 20 - 09 - 1995ல் இருந்து 15 - 10 - 95இற்குள் தாம் விண்ணப்பித்த விதைக் கிழங்குகளுக்கு ஒரு பெட்டிக்கு 3500/- ரூபா முற்பணமாக தங்கள் பிரதேச செயலர் பிரிவுகளில் அமைந்திருக்கும் பசுமை வேளாண் சேவை நிலையங்களில் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(ஏ-5311)

## பனைமரக்காலை உரிமையாளர்களுக்கு

மக்களின் அத்தியாவசிய பனைமரத் தேவைகளை கருத்திற் கொண்டும், கண்டபடி பனைதறித்தலை கட்டுப்படுத்தும் முகமாகவும் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொண்ட பனை மரக்காலை உரிமையாளர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பனைமரம் தறிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் அனுமதி அளிக்கப்பட்ட மரக்காலைகள் மட்டுமே இப்புதிய நடைமுறையை பின்பற்றலாம். வேறெந்த மரக்காலைகளுக்கும் இவ் அனுமதி வழங்கப்படமாட்டாது. இவ் விதிகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பு:

30 - 9 - 95க்கு முன்னர் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்துகொண்ட பனை மரக்காலை உரிமையாளர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்,
தாவடி,

(எ- 5315)

### மணிவாக்கு

பிறருக்கென்று வாழ்பவர்களே வாழ்பவர்கள்; மற்றவர்கள் நடைப்பிணத்துக்கு சமமானவர்களே.

— சுவாமி விவேகானந்தர்.

## நமது நோக்கு

### கட்டாய ராணுவ சேவை

சிறிலங்கா அரசு பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி அளிப்பது பற்றி சிந்தித்து வருகிறது என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

சந்திரிகா முன்வைத்த தீர்வு யோசனைகளுக்கு சிங்களவர்கள் மத்தியில் எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானித்த அவர் சிங்களவர்களை வெருட்டி தனது யோசனைகளை அதாவது காலத்துக்குக்காலம் சிங்களவரின் எதிர்ப்புக்களைச் சமாளிக்க திருத்தப்பட்ட நிலையில் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்காகவே இவ்வாறு கூறுகிறார் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் இவரது இக் கூற்று சிங்களவர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தப் போகிறது. ஏற்கனவே சரிந்து கொண்டுவரும் ஆளும் கட்சியின் செல்வாக்கு மேலும் பாதிப்படையும்,

ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் ரஜீவும் சேர்ந்து இந்திய—சிறிலங்கா ஒப்பந்தத்தை உருவாக்கியதன் காரணமாக சிறிலங்கா இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது. அந்த நேரத்தில் இந்திய இராணுவத்துக்கு எதிராக போராடியவர்கள் விடுதலைப் புலிகள் மட்டுமே. சிறிமாவோ, ஜே. வி. பி. யினர் உட்பட சிங்களவர்கள் வாய்ப்போர் நடத்தினார்களே ஒழிய ஒரு கல்லைத் தன்னும் இந்திய இராணுவத்துக்கு எதிராக எறியவில்லை. அத்தகைய சிங்களவர்கள் போர்ப் பயிற்சிக்கு இணங்குவார்கள் என்பது கேள்விக் குறியான விடயம். சிங்கள இளைஞர்கள் ராணுவத்தில் சேர்வது வேலையில்லாத திண்டாட்டத்தின் காரணத்தால்தான், அதில் உள்ள சலுகைகள் அவர்களை முதலில் ஈர்க்கிறது. சேவையில் சேர்ந்துவிட்ட பின்னர்தான் தாங்கள் அரசியல்வாதிகளின் நலன்களுக்காகவும் அவர்களின் அகங்காரம், மமதை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாப் போக்குகளுக்காகவும் தம் இன்னுயிரை ஏன் தியாகம் செய்ய வேண்டுமென்று சிந்திக்கிறார்கள். அச் சிந்தனையின் செயல்பாடே இராணுவத்தை விட்டு களவாக ஓடிச் செல்வது. அவர்கள் ஓடும்போது தம்மிடம் உள்ள ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டுதான் செல்லுகிறார்கள். வெளியில் கொலை, கொள்ளை போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இதனால் நாட்டின் சமூகவாழ்வு சீர்குலைகிறது.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோரை இராணுவப் பயிற்சிக்கு உள்ளாக்குவது என்பது ஒருவகையில் சந்திரிகாவின் போர் வெறியையும் பிரதிபலிக்கிறது, அவருக்கு விடுதலைப்புலிகளை தோற்கடித்து தமிழ் மக்கள் மீது தான் விரும்பிய தீர்வை திணிக்கவேண்டுமென்பதே பிரதான நோக்கம். அதை எவ்விதமாவது நிறைவேற்றிவிட வேண்டுமென்று அவர் கனவு காணுகிறார். ஆகவே அவருக்கு போரை முன்னெடுக்கவேண்டிய அவசியமுள்ளது.

இதைவிட நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல் காலங்களில் சந்திரிகா, போரினால் இலாபமடைபவர்கள் கொழும்பிலுள்ள அரசியல் வாதிகளும் இராணுவ உயர் அதிகாரிகளும்தான் என்று குற்றம்சாட்டினார். ஆனால் சந்திரிகா ஆட்சிக்கு வந்த பின்னரும் இந்த நிலை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அதற்கு அங்கீகாரம் வழங்குவதுபோல்தான் சந்திரிகாவின் செயல்பாடும் உள்ளது

''த ஐலன்ட்'', ''திவயின'' போன்ற பத்திரிகைகளை வெளியிடும் உபாலி பத்திரிகை நிறுவனத்தின் செயல்பாடும் டாக்டர் சீவலிரத்வத்தை, திருமதி லக்சுமி விஜேவர்த்தன உட்பட ஐந்து பணிப்பாளர்களைக் கொண்ட ''ஏசியன் இன்ரநஷனல்'' என்ற நிறுவனம் இராணுவத்துக்கு ஆயுத விநியோகத்தில் சம்பந்தப்பட்டுள்ளது என்ற தகவல்கள் வெளிவந்துள்ளன. ஆகவே இந் நிறுவனங்களுக்கு யுத்தம் தொடரவேண்டுமென்பது அவசியம். ஆதனால்தான் தாங்கள் பிரசுரிக்கும் பத்திரிகைகளில் இனத்துவேசத்தை வளர்ப்பதிலும் தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை பரப்புவதிலும் சமாதானம் பற்றிய பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டை போடுவதிலும் இவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள், இதில் உள்ள முக்கிய விடயம் என்னவென்றால் டாக்டர் சீவலி ரத்வத்தை சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சொந்தக் கடைசித் தம்பி: ஜனாதிபதி சந்திரிகாவின் தாய்மாமன். இராணுவ தளபாட வியாபாரத்தில் கிடைக்கும் கொழுத்த இலாபம் நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பொசிவதைப் போல் சந்திரிகா அம்மையாருக்கும் சேரும் வாய்ப்பும் உண்டல்லவா?

# தேசிய அரசு நிறுவும் யோசனையை கட்சிகள் ஒரேயடியாக நிராகரித்தன

(கொழும்பு)

நாட்டில் தேசிய அரசு நிறுவும் யோசனையை பல கட்சிகள் ஒரேயடியாக நிராகரித்துள்ளன

இனப்பிரச்னையைத் தீர்க்கவும், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும் நாட்டில் உடனடியாக சகல கட்சிகளும் அங்கம் வகிக்கும் தேசிய அரசொன்றை அமைக்குமாறு போக்குவரத்து அமைச்சர் திருமதி சிறிமானி அத்துலத் முதலி கேட்டிருந்தார்.

இந்த யோசனையை பல கட்சிகளும் நிராகரித்துள்ளதுடன் இது ஏற்கமுடியாததொன்றெனக் கூறியுள்ளன. தேசிய அரசு அமைப்பதன் மூலம் நாட்டின் இன ஐக்கியம் பாதிக்கப்பட்டுவிடுமென அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இப்பிரச்னைக்கு தீர்வுகாண தேசிய அரசு அமைப்பதே சிறந்ததென முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியிருந்ததும் தெரிந்ததே.

-சி

# இராணுவ பலத்தைப் பெருக்குவதே சந்திரிகாவின் முக்கிய நோக்கமாகும்!

(கொழும்பு)

இராணுவ படை பலத்தை அதிகரிக்கச் செய்வதையே ஜனாதிபதி சந்திரிகா தனது முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பதாக ஏ. எவ். பீ. செய்தி தெரிவித்தது.

நாட்டில் யுத்த சூழ்நிலை தொடர்வதால் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவ பயிற்சிவழங்கப்படும் என அவர் கூறியிருப்பது நாட்டில் பெரும் இரத்தக் களரியை ஏற்படுத்தச் செய்யும் ஒரு முயற்சியாகும்,

சமாதானத்தைவிட ஜனாதிபதி சந்திரிகா யுத்தத்தில் வெற்றி பெறுவதையே இலக்காகக் கொண்டு செயல்படுவதாகவும் அந்தச் செய்தி தெரிவித்தது,

இதேவேளை ஜனாதிபதியின் மேற்படி அறிவிப்பு தெற்கில் பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் விமர்சகர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

சி

# தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை அரசு ஒருபோதும் ஏற்கவில்லை

## - அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை அரசு ஏற்றுக்கொள்ளவுமில்லை. இந்த கோட்பாட்டின் அடிப்படையில் காணி உரிமை சம்பந்தமாக வகுக்கப்படவுமில்லை என அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்;

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர்மேலும் கூறுகையில்:

குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்படும்போது அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கே முதலிடம் வழங்கப்படும்; அதன் பின்னர் அதே மாகாணத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;

ஒரு மாகாணத்தை சேர்ந்தவர்கள் மற்ற எந்த மாகாணத்திலும் காணியை சொந்தமாக வைத்திருக்கத் தடையேதும் கிடையாது. அரசியல் யாப்பின் 12வது அதிகாரத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு மாகாணசபையாவது மற்றொரு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் காணி வாங்க முடியாதென சட்டம் கொண்டுவந்தால் அது அரசியல் யாப்பில் தெரிவிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கு முரணாக இருக்கும்: அதாவது யாரும் நாட்டில் எங்கும் காணி வாங்க முடியும்;

இது மறுக்கப்பட்டால் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நியாயம் பெறலாம் எனவும் தெரிவித்தார்;

சி

## பாதுகாப்பு நிதி செலுத்தல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மட்டத்திற்குட்பட்ட குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை மக்களில் தேசிய பாதுகாப்பு நிதி செலுத்துவதற்கு ஒப்புதல் அளித்தவர்கள் திங்கள், புதன், சனி ஆகிய கிழமைகளில் முற்பகல் 9-00 மணி முதல் 11-00 மணிவரை காங்கேசன்துறை வீதி. இணுவிலில் அமைந்துள்ள தேசிய பாதுகாப்பு நிதிச் செயலகத்தில் செலுத்தலாம் என அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்;

விசேடமாக 20ம் 25ம் திகதி அடுத்த மாதம் 09ம் திகதிகளில் பிற்பகல் 3-00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நிதி செலுத்துவதற்காக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

சி

## நீயுருகி மூட்டியதீ தமிழீழம் படைக்குதையா

மானமுடன் வாழ்ந்ததமிழ் மரபுகாக்க
    மரபுவழி வந்தவெங்கள் மண்ணைக்காக்க
தேனமுதத் தமிழ் மொழியி னுரிமைகாக்க
    தித்திக்கு மிளமையினைத் தியாகஞ் செய்து
சேனையுட னடி பதித்த பாரதத்தின்
    தீதுணர்ந்து திமிரடக்கி அறத்தைக்காக்க
கானமழை பொழியு மந்த வேலவனின்
    காலடியில் தவமிருந்த திலீபா வாழி.

சிறு புயல் வேகமதில் சுழன்றடித்து
    செந்தமிழால் அரசியலி னறிவுரைத்து
ஆறுதற்கும் காலமிலா தலைந்துழைந்து
    அடிமைத்தளை தகர்க்குமுயர் தலைவனுக்கு
வீறுடைய தளபதியாய் ஆட்திரட்டி
    விரைவிலொரு வேங்கைகளி னணி வளர்த்து
பேறடையும் நாமிருக்க நீயுருகி
    மூட்டியதீ தமிழீழம் படைக்குதையா.

ஆறாத துயர்சுமந்து நீயொடுங்கி
    அணுவணுவாய் வேதனையால் உருக்குலைந்து
தேறாத நிலையெடுத்தாய் திகைக்கவைத்தாய்
    பெற்றவனு மருகிருந்து கலங்கவைத்தாய்
மாறாத துயரமெலாம் நாம் சுமக்க
    வருங்காலச் சந்ததிக்காய் உனையழித்தாய்
நீறாக எதிரிபடை தகர்க்கின்ற
    புலிவீரர் தமிழீழம் படைக்கின்றாரே.

— மாரீசன்.

# ஆட்பதிவுச் சட்டம்

15 வருடங்களாக நடைமுறையில் [நான் இதை எழுதுகையில்] இருந்துவரும் ஒரு சட்டத்தைப்பற்றி அதாவது ஆட்பதிவு சட்டத்தைப் பற்றி இங்கு சொல்ல விழைகின்றேன்.

நாடாளுமன்றில் இச்சட்டநகல் கொணரப்பட்டபோது அதை நான் எதிர்த்ததோ சமஷ்டிக்கட்சியை விட்டு நான் வெளியேற்றப்பட்டதோ முக்கியமல்ல. தமிழ்மக்கள் தம் வாழ்வில் அச்சட்டம் ஏற்படுத்திய தாக்கம் கண்டு விசனிக்காமல் எந்தவொரு தமிழ்மகனும் இருந்திருக்க முடியாது என்பதையே இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும்.

அச்சட்டம் விளைவித்த பாதிப்பு 1968 இல் நான் அது பற்றி அஞ்சியதைவிட அதிகமாகவே ஆகிவிட்டது.

அந்நேரத்தில் நாட்டின் குடிமக்களில் அரைவாசிப் பேருக்குத்தானும் அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதை அரசாங்கமே மறுக்க முடியாது. ஆட்பதிவுக்குப் பொறுப்பான ஆணையாளர் தமது திணைக்களம் போதிய நிதியைக் கொண்டிருக்கவில்லை எனவும் பணியாளர்கள் எண்ணிக்கை காணாது எனவும் முறையிட்டிருந்தார்.

நிலைமை இப்படியிருக்க யாவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டுவிட்டது என்ற நினைப்பில் பொலிசாரும் பாதுகாப்புப்படையினரும் நடந்து கொண்டனர்.

தமிழ் மக்கள்மீது இச்சட்டம் இழைத்த பேரிடர்தனை வார்த்தை கொண்டு வர்ணிக்க முடியாது. தமிழ் பிரதேச கிராமங்கள் முழுமையாக சுற்றிவளைப்புக்கு உள்ளாகின. கிராமவாசிகள் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டனர். அவர்களில் அடையாள அட்டை வைத்திராதோர் விசேடமாக இளைஞர்கள் பாதுகாப்பு படையினரால் அப்புறப்படுத்தப் பட்டுப் பின் வேறிடம் கொண்டு செல்லப்பட்டனர். அதன்பின் அவ் இளைஞர்கள் பற்றிய சேதி எதுவுமே வெளிவராது போகும்.

இது மட்டுமா? சிலரது அதாவது இளைஞர்களது அடையாள அட்டைகள்பறித்தெடுக்கப்பட்டு அழிக்கப்பட்டபின்பு அடையாள அட்டைகள் இல்லாமல் இருந்தனர் என்று குற்றஞ்சாட்டி அவர்களை கொண்டுசெல்வார்கள்.

கடவுச்சீட்டு அல்லது ஏனைய பிரயாண அனுமதிப் பத்திரங்கள் வேண்டி விண்ணப்பிக்கையிலும் இவ்வாறே செய்யப்பட்டு அவ்விண்ணப்பங்கள் நிராகரிப்புக்கு உள்ளாகின.

அச் சட்டத்தால் குறிப்பாக 1982 இல் நடைபெற்ற சதிவேலைகளும் குளறுபடிக்குறும்புகளும் சிறிதுகாலம் வெளித்தெரியாது இருந்தன. ஆயினும் சர்வதேசச் சஞ்சிகைகள் இதுதொடர்பான அறிக்கைகளை பெறத் தொடங்கியிருந்தன. இச்சட்டம் தமிழர்களுக்கு எதிரான ஆயுதமாக உயிரழிவு செய்யும் இயந்திரச் சுடுகலன்களைப் போன்று பாவிக்கப்படுகின்றது என்ற செய்திகளை அவை தெரிந்து கொண்டன.

தமிழராக இருக்கின்றனர் என்பதனாலும் அவர்களிடம் அடையாள அட்டை இல்லை என்பதனாலும் கண்டபடி பாதுகாப்புப்படையினரின் கெடுபிடிகளுக்கும் அடாவடித்தனத்துக்கும் உள்ளாகி கொண்டு செல்லப்படுகின்றனர். இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக சர்வதேச தினசரிகளில் வெளியான செய்திகளை பார்ப்போம்.

"அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் 1984 செப். 3 அன்று சிறிலங்கா இராணு-

---

"தமிழர் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்" என்ற நூலை முன்னாள் காவலூர் நாடாளுமன்ற அங்கத்தவரும் 'சுயாட்சிக் கழகத்தை' உருவாக்கியவருமான வி.நவரத்தினம் அவர்கள் எழுதியுள்ளார். அவரது நூலிலிருந்து ஒரு பகுதியின் சாராம்சம் தரப்படுகின்றது.

---

-வத்தால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

"திருக்கோணேஸ்வரம் கோயிலுக்குச் சென்றுவிட்டு மனைவியுடன் திரும்புகையில் இராணுவத்தினரால் நிறுத்தப்பட்டார். அவர் வந்தகார் சோதனைக்கு உள்ளானது. தடன் அடையாள அட்டை காண்பிக்குமாறு பணிக்கப்பட்டார்.

தன்னிடம் அது அந்நேரம் இல்லை எனக் கூறிய அவர் மனைவியின் அடையாள அட்டையை சமர்ப்பித்தார். இராணுவமோ திருப்தி அடையாமல் அவரை திருமலை இராணுவ முகாமுக்கு கொண்டுசென்றது. பின் அவ்விடத்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். விசாரணைகளின் பின் அவர் விடுவிக்கப் பட்டார்.

தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் காலஞ்சென்ற ஜி.ஜி. பொன்னம்பலத்தின் மகனுமான அவர் பிரபலமான ஒருவர் என்பது யாவரும் அறிந்ததே. உண்மை நிலை இப்படி இருக்கையில் இராணுவம் அவரிடம் நடந்து கொண்டமுறை தமிழர் யாவருமே கடுமையான கெடுபிடிகளுக்கும் அடாவடித் தனங்களுக்கும் உட்படுகின்றனர் என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு லண்டனில் வெளியாகும் அச் சஞ்சிகை செய்தி வெளியிட்டிருந்தது.

சுவிட்ஸர்லாந்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை தொடர்பாக ஆய்வு செய்யும் நோக்கில் சுவிஸ் அரசு இரு அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பியது. பீற் ஹெஸ், உர்ஸ் ஹடோன் ஆகிய அவ்விருவரும் 1984ல் இங்கு வந்தனர்.

சொந்தநாட்டில் தமிழர்களின் நிலைமைகள் என்ன என்பது பற்றி அவர்கள் ஒரு அறிக்கை தயாரித்தனர். அவ்வறிக்கை பற்றி பிரிட்டிஷ் தினசரி ஒன்றின் ஜெனீவா நிருபர் கூறுவதைப் பார்ப்போம்

"திரு. பீற்ஹெஸ்ஸும், திரு. உர்ஸ்ஹடோனும் ஆகஸ்ட் மாதம் எட்டு நாட்களை இலங்கையில் கழித்தனர். அவர்களது 24 பக்க அறிக்கையின்படி இலங்கையில் அடையாள அட்டை இல்லாத எவரும் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படுவர் எனத் தெரியவருகிறது"— இவ்வாறு அந்நிருபர் தெரிவிக்கிறார்.

மக்களை வருத்தப்போகும் சட்டம் அதுவெனத் தெரிந்தும் அதை தடைசெய்யப் போதுமான பலம் இருந்தும் நாடாளுமன்றில் அதை நிறைவேற்றத் துணை நின்ற தமிழ் தலைவர்களின் நிலை மிகவும் இழிவான தொன்றேயாகும். அவர்கள் மட்டும் உறுதியுடன் எதிர்த்திருந்தால் தமிழ்மக்கள் இப்படியெல்லாம் இடர்ப்பட நேர்ந்திருக்காது... ... டட்லி சேனநாயக்கா இச்சட்டத்தை கொண்டுவரும்போது நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் கபட நோக்கங்களை மறைத்து பின்தங்கிய வறுமைப் பட்ட நாடான இலங்கைக்குள் களவாகக் குடியேறுபவர்களைத் தடுப்பதற்கான நடைமுறை என்று கூறினார். அப்போது படித்த மனிதர்களான அமைச்சர் திருச்செல்வமும் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடத்தில் இருந்த அவரது கூட்டாளிகளும் இவ் ஏமாற்றுக் கதையை நம்பினார்கள். திருச்செல்வமும் சேர்ந்து இச் சட்டம் உருவாவதற்கு வழி வகுத்தார். அதை எதிர்த்து பேசிய என்னை "கட்சியில் இருந்து விலக்குவதைத் தவிர வேறுவழியில்லை" என்று திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

---

## இராசி பலன்

**19-09-1995**

செவ்வாய்க் கிழமை

[தமிழுக்கு புரட்டாதி-2]

தசமி முன்னிரவு 8.00 வரை புனர்பூசம் முன்னிரவு 10-34 வரை சித்தயோகம் இராகு காலம் மாலை 3-03 முதல் 4-33 வரை சுபவேளை காலை 10-33 முதல் 12-03 வரை

மேடம்: தொழில்பாராட்டு பணவரவு. குடும்பமகிழ்ச்சி

இடபம்: காரிய தாமதம் மாமனார்கவலை, அலைச்சல்

மிதுனம்: எதிர்பாராத வெகுமதி, நண்பர் வருகை சுபகருமம்.

கடகம்: மனவேதனை, தொழில் கஷ்டம், அகால உணவு

சிங்கம்: வாக்கு வன்மை அதிகாரிகள் பெருமை. தெய்வ சிந்தனை

கன்னி: முயற்சி லலிதம் நற்செய்தி, சகோதர நன்மை

துலாம்: அன்னியர்தொல்லை கடன்சுமை, ஏமாற்றம்

விருச்சிகம்: வீண்பழி. மன சங்கடம், இனசனப்பகை

தனுசு: குடும்ப செலவு தொழில் உறவு' பிறர்க்கு உதவுதல்

மகரம்: பெண் அறிவுரை, நினைத்ததை சாதித்தல், கலகலப்பு

கும்பம்: அடிமை நிலை கண்டிப்பு. தொழில் வேதனை

மீனம்: இருப்பிடமாற்றம் பணக்கஷ்டம். அமைதி குன்றல்

— ஜோஸ்யர்

---

## பருத்தித்துறை வட்டத்தில் பாதுகாப்பு நிதிக்கு 34லட்சத்து 45 ஆயிரம் ரூபா

(நெல்லியடி)

தமிழீழ போர் நிதி பரப்புரைக் கூட்டங்கள், பருத்தித்துறை வட்டத்தில் நேற்று முன்தினம் இரு இடங்களில் நடைபெற்றபோது 34 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பாதுகாப்பு நிதியாக தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தியிடம் கையளிக்கப் பட்டது.

பருத்தித்துறை வட இந்து கல்லூரியில் மாலை 4 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் ரூபா 18 இலட்சமும், வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவில் முன்றலில் இரவு 7 மணிக்கு நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் 16 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தியிடம் கையளிக்கப் பட்டது.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் துறைமுகவாகன ஒன்றியம் சார்பாக தலைவர் திரு. சோமசுந்தரம் மங்களநாதன் இரண்டு லட்ச ரூபாவும், நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய சார்பாக பரிபாலன சபை இரண்டு லட்ச ரூபாவும், தும்பளை சிற்றி வெதுப்பக உரிமையாளர் திரு.சீ. தங்கவடிவேல் ஒன்றேகால் லட்ச ரூபாவும் பாதுகாப்பு நிதியாக வழங்கினார்கள்.

மற்றும் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையின் சார்பில் 10 லட்சம் ரூபாவும் வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புகுழு 1லட்சம் ரூபாவும், வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் மடத்தடி இந்து இளைஞர் மன்றம் எழுபத்தையாயிரம் ரூபாவும், திரு. த. பொன்னம்பலம் எழுபத்தையாயிரம் ரூபாவும், திரு சு.சுந்தரலிங்கம் எழுபத்தையாயிரம் ரூபாவும், வல்வை முத்துமாரி அம்மன் ஆலய குரு திரு. சோ தண்டபாணிதேசிகர் மேலும் ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கினார்கள். 160-51

---

## தையல் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குரிய தையல் பயிற்சி வகுப்புகள் 02-10-95ல் இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே இப் பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் அல்லது 8ம் வகுப்பு சித்தியடைந்த பெண்கள் வலிதெற்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பண்டிதர் வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம்தனதுபிரவேச பண்டித பாலபண்டித பண்டித வகுப்புக்களை வழமை போல் கல்விக் கோட்டங்கள் தோறும் நடாத்தி வருகிறது. பிரவேச பண்டிதர் வகுப்புகளிலே சேர விரும்பும் மாணாக்கர்கள் அவ்வக் கோட்டங்களின் பொறுப் பாசிரியர்களோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

---

## சகலரும் ஒன்றாய் சபதம் எடுப்போம்!

கடலிலே காவியம் படைத்திட எண்ணி,
கற்பிட்டி கடலில் கரும்புலி வீரர்,
காத்து நின்ற கணத்திலே அங்கு,
கடலரசன் "கடல்உலா" வந்தான்.

தந்தையை, தனயனை, கடலிலே கொன்றவன்
தங்க வீரரை களப்பலி செய்தவன்,
தமிழ் நிலத்திலே தமிழர் உயிர்களை,
தட்டிப்பறித்தவன், தரணியில் கொடியவன்.

இத்தனை கொடுமைகள் செய்திடும் இவனை,
இனியும் நாங்கள், கடலிலே உலாவிட,
இடமளித்தல் ஆகாதென்று இடித்துரைத்தவர்,
இடியாய் எழுந்தார், வெடியாகிப் போனார்.

நளாயினி தலைமை தாங்கிய படையில்,
நால்வர் சென்றே தொடுத்தனர் போரை.
நாணிய 'அரசன்' சிதறிய வேளை.
நானிலம் போற்றும், நற்றமிழ் மகிழ்ந்தது.

'சாகரவர்த்தனா', வெடித்தே சிதறிய,
சரித்திர நிகழ்வின், வருடநிறைவில்,
சகலரும் ஒன்றாய், அணியாய் திரண்டு.
சபதம் எடுப்போம்; அவர் வழிதொடர்வோம்.

ஆளணி பெருக்கிட, அனைவரும் இணைந்தே,
ஆயுத பலத்தால் எதிரியை வெல்வோம்;
நிதிபலம் பெருக்கியே, நிலத்தினை காப்போம்,
நீதியான 'தமிழீழம்' அமைந்திட மகிழ்வோம்.

நாக. தயாகரன்

[★ "சாகரவர்த்தனா" தகர்ப்பின் ஓராண்டு நினைவாக]

---

பஞ்சம் பசியென்று நெஞ்சிலே வாழுவோம்;
நெஞ்சுறுதிகொண்டே நிமிர்ந்து எழுவோம்.

# தொலைநோக்கிகள் மூலம் கொழும்பில் ஆழ்கடலை உற்றுநோக்கும் படையினர்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கடற்கரைகளில் கடற்படையினர் தொலைநோக்கிகள் மூலம் ஆழ்கடலை உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பது வழமையான ஒரு நிகழ்ச்சியாகவிட்டதாம்.

விடுதலைப்புலிகளிடம் கடற்படையினர் மூன்றிற்கும்மேற்பட்ட 'வோட்டர் ஜெற்' எனப்படும் அதிவேக விசைப்படகுகளை இழந்துள்ளனர். இந்த மூன்று படகுகளும் அரசுக்கு இன்று பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. இவற்றில் 50 கனன்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை ஆழ்கடலில் 35 கனன்கள் வேகத்திச் செல்லக்கூடியவை.

இவைதவிர ஒரே இரவில் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி செயலகத்தையோ, துறைமுகத்தையோ தாக்கி விட்டுச் செல்லக் கூடியவை. அத்துடன் இரண்டு அடி நீளக்கூட இலை விரைவாகச் செல்லக் கூடியவை.

இதையடுத்தே புலிகள் கொழும்பையும் அதன் சுற்றுப்புறங்களையும் இவற்றின் மூலம் தாக்கலாம் என்ற அச்சம் படையினர் மத்தியில் எழுந்துள்ளதாம். -சி

## பதுங்குகுழி அமைத்தல்

(கொழும்புத்துறை)

யாழ். சிகை அலங்கரிப்பாளர் சங்க சமாசமும், அதன் அங்கத்தவர்களும் அண்மையில் சிரமதானப்பணி மூலம் கொழும்புத்துறை, துறைமுகம் சந்தியில் இருந்து மணியம் தோட்டம் வரை வீதி ஓரங்களில் பதுங்குழிகளை அமைத்துள்ளனர். 154

## வருடாந்த உற்சவம்

(நெல்லியடி)

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாத 23 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 160

## திருவிழா

(அரியாலை)

அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகா மாரி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 22 ம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 23 ம் திகதி சனிக்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது. -59

# திரியாய் இராணுவ முகாமின் பலம் பன்மடங்கு அதிகரிப்பு

(கொழும்பு)

திருகோணமலை திரியாய் இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டு இராணுவத்தினரின் தொகை பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திரியாய் பகுதியில் ரோந்து செல்லும் படையினர் மீது விடுதலைப்புலிகள் அடிக்கடி மேற்கொள்ளும் அதிரடித் தாக்குதல்களினால் படையினர் தரப்பில் ஏற்பட்டுவரும் இழப்புகளை ஈடுசெய்யுமுகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் திருமலை வீதிகளில் நடமாடும் தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் வகை தொகையின்றி கைது செய்யப்படுவதும் பின்னர் முகமூடிகளின் முன் நிறுத்தும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது -க

## மண்ணெண்ணை விநியோகம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து மாகோ கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணை பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டைமூலம் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கக்கடைகள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டுவரும் மண்ணெண்ணை ஒரு லீற்றர் 25 ரூபாவீதம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது, 162-சி

## சிற்றூழியர்விபரம் சேகரிப்பு

(குருநகர்)

பாடசாலைகளில் கடமை புரியும் நிரந்தர சேவையிலுள்ள சிற்றூழியர்களின் விபரங்களை பாடசாலையின் பெயர் ஊழியர் பெயர் நியமனத் திகதி நியமன அதிகாரியின் பெயர் ஆகிய விபரங்களுடன் உடன் அனுப்பி வைக்குமாறு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க: தியாகராசா சகல கோட்டக் கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணித்துள்ளார்.

தற்போது சிற்றூழியர்களை சேவையில் புதிதாக சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதனால் இத்தகைய கணக்கெடுப்பு அவசியம் தேவைப்படுவதாகவும் மாகாண கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது 95.சி

# 150 மாணவர்களுக்கு பூச்சி மருந்து வழங்கல்

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் கிராம எழுச்சிப் பணி மூலம் அண்மையில் செம்பியன் பற்று இரு பாடசாலைகளில் பூச்சிமருந்து இலவசமாக வழங்கப்பட்டது.

டாக்டர் எம். யோகேஸ்வர தேவனுடைய உதவியுடன் குடத்தனை அமெரிக்கமிஷன் பாடசாலை மாணவர்கள் 150 பேர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை மூலம் மருந்து வழங்கப்பட்டது.

தென்னிந்திய திருச்சபை சிறுவர் பாடசாலை சிறுவர்கள் பெற்றோர்கள் நூறு பேர்களுக்கும் மருந்து வழங்கப்பட்டது. மொத்தம் 45 சிறுர்களுக்கு பூச்சி மருந்தும் வழங்கப்பட்டது.

குடத்தனை அமெரிக்கமிஷன் பாடசாலை அதிபர் ரி. நவரத்தினம் முன்மாதிரியாக இருந்து தன்னாலான உதவிகளைச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. -154

# அறிவியல் 'கழக இவ்வார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் இயங்கும் மாணவர் அறிவியல் கழகத்தின் இந்தவார நிழ்ச்சிகள்

இன்று செவ்வாய் பி.ப 3-00 மணியிலிருந்து 4-00 மணிவரை ஆண்டு 8 கணித செயன்முறை வகுப்பு

நாளை புதன் பி. ப 4-00 மணியிலிருந்து 5 00 மணி வரை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் பி ப 5-00 மணியிலிருந்து 6-00 மணி வரை ''அறிவியல் ஒளிப்படக் காட்சி''

21 ம் திகதி பி ப 3-00 மணியிலிருந்து 4-00 மணிவரை ஆண்டு 10 கணித செயன் முறை வகுப்பு பி ப 3-30 மணியிலிருந்து 5-00 மணி வரை விஞ்ஞான செயன் முறை வகுப்பு.

22 ம் திகதி வெள்ளி பி.ப 3-00 மணியிலிருந்து 4-00 மணிவரை கணித செயன் முறை வகுப்பு ஆண்டு 11 விஞ்ஞான செயன் முறை வகுப்பு.

23 ம் திகதி சனி மு.ப 9-30 மணியிலிருந்து 11-00 மணி வரை ஆண்டு 9 கணித செயன் முறை வகுப்பு பி. ப 4-00 மணியிலிருந்து 5-00 மணிவரை ஆண்டு 9 விஞ்ஞான செயன் முறை வகுப்பு -சி

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 15வது பட்டமளிப்புத் தொடரில் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு லேடி இராமநாதன் நினைவுப் பேருரை கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என். ஞானகுமாரன் லேடி இராமநாதன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

நாளை மறுதினம் வியாழக்கிழமைபிற்பகல் 3-00 மணிக்கு சேர் பொன். இராமநாதன் நினைவுப்பேருரையை கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை, நிகழ்த்துவார் 162-சி

0 0 0

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் இன்று 19ம் திகதி பி. ப. 2-30மணிக்கு நல்லூர் ஸ்தான சீ. சி. த. க. பாடசாலையில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு: த: துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

# மரணச் சடங்கு செலவுக் கொடுப்பனவு

(கொழும்புத்துறை)

வலிகாமம் மேற்குப்பிரதேச சபைச் செயலாளர் பிரிவில் கடந்த மாதம் 25ம் திகதி மேற்கொள்ளப்பட்ட 'ட்ரகன் பயர்' இராணுவநடவடிக்கையின் போது படையினரின் கண்மூடித்தனமான ஷெல் வீச்சுக்கு பலியான பதின்மூன்று பொதுமக்களின் குடும்பத்தினருக்கு யாழ்.செயலகம் மரணச் சடங்குச் செலவாக இரண்டாயிரம் ரூபா வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது,

இந்த நிதியைப்பெற சமாதான நீதிபதி, கிராமசேவையாளரின் உறுதிப்படுத்திய ஆவணம், மற்றும் மரணச் சான்றிதழுடன் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் சம்பந்தப்பட்டோர்தொடர்பு கொள்ளுமாறு யாழ் மாவட்ட செயலகப் பிரதித் திட்டப் பணிப்பாளர் திரு. எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். -154

## கல்லூரி இடமாற்றம்

[கொழும்புத்துறை]

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி கடந்த 13ம் திகதி புதன்கிழமை தொடக்கம் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் இயங்குவதாக கல்லூரி அதிபர் ஆ. கமலநாதன் தெரிவித்துள்ளார். -154

## வீதி விளக்குகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் வீதி விளக்குகள் மீண்டும் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டு வருகின்றன.

விஷமிகள் சிலர் வேண்டும் என்று விளக்குகளை உடைத்து சிமினியை களவாடி செல்லுகின்றனர் என்று மாநகர மின்சார பொறியியலாளர் வி. நவரத்தினராசா தெரிவித்தார்.

இவ்வீதி விளக்குகள் தொடர்ந்து உடைக்கப்பட்டால் அப்பகுதிக்கு வீதி விளக்குகள் மீண்டும் அமைக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். 170-சி

## விளையாட்டுப் போட்டி

[நெல்லியடி]

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியின் ஆரமப பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் 22ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. 160

# மட்டக்களப்பு - கொழும்பு ரயில் பாதை தகர்ப்பு

[கொழும்பு]

மட்டக்களப்பு - கொழும்பு ரயில்பாதை தகர்க்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இந்த ரயில்பாதை குண்டு வைத்தும் வேறு வழியிலும் தகர்க்கப்பட்டுள்ளதால் மட்டு-கொழும்பு ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரயில் பாதை சீர் செய்யப்பட்டு வருகின்ற போதும் பாதை அடுத்தடுத்து தகர்க்கப்பட்டு வருவதால் படையினர் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு பகுதியில் இரு மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளதால் பல பகுதிகளும் இருளில் மூழ்கியுள்ளன. பல படை முகாம்களும் இருளில் மூழ்கிவிட்டதாம். சி

## பாம்புக்கடிக்கான ஊசிமருந்து

(பண்டத்தரிப்பு)

அண்மையில் கொழும்பிலிருந்து யாழ் சுகாதாரத்திணைக்களத்திற்கு கப்பல் மூலம் வந்து சேர்ந்த மருந்துவகைகளில் பாம்புகடிக்கான ஊசி மருந்துகளும் இடம்பெற்றிருப்பதாக அறியப்படுகிறது.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை, பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலை, பளை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிற்கு இந்த ஊசிமருந்து பங்கீடுசெய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. 72

# இலங்கை மீனவர்களை இந்தியப்படைகாப்பாற்றியது

(சென்னை)

ஆந்திர பிரதேச கடற்பகுதியில் 15 நாட்களாக தத்தளித்துக்கொண்டிருந்த நான்கு இலங்கை மீனவர்களை இந்திய கரையோரக் காவல் படையினர் மீட்டுள்ளனர்:

கடந்த மாதம் 29 ம் திகதி இலங்கையிலிருந்து மீன்பிடிக்கச்சென்ற இவர்களின் படகு இயந்திரக் கோளாறு கடற்கொந்தளிப்பு காரணமாக ஆந்திர பிரதேசத்தை சென்றடைந்தது அங்கு கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த போது இந்தியப் படையினரால் மீட்கப்பட்டனர்.

இவர்கள் நால்வரையும் இலங்கைக்கு அனுப்புவதற்காக சென்னையில் தமிழக பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது: -இ

# புதிய காப்புறுதித் திட்டம் 2லட்சம் ஆசிரியர்பயனடைவர்

(கொழும்பு)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிமுகம் செய்துள்ள 'குரு அபிமான' என்ற புதிய காப்புறுதி திட்டத்தின் மூலம் 1,85,000 ஆசிரியர்கள் நன்மையடையவுள்ளார்கள்.

ஆசிரியர்களுக்கான காப்புறுதித் திட்டத்துக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா ஆயுட் காப்புறுதி வழங்கப்படும். முற்றுக அவர் வலது குறைந்திருந்தாலும் அவருக்கு இரு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும்.

விபத்தொன்றில் உறுப்பு ஒன்றை இழந்தால் நஷ்டஈட்டுத் தொகையாக 50,000ரூபா பெற்றுக் கொள்ள முடியும். வைத்திய சிகிச்சை, சத்திர சிகிச்சையின் போதும் ஆசிரியர் ஒருவர் அச்செலவுக்காக பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். ரசி

தொண்டர் நிறுவன அதிகாரிகளுடன்

# ஹபறண கப்பல் நேற்று பருத்தித்துறை வந்தது

(கொழும்பு)

திருகோணமலையில் இருந்து நேற்றுக் காலை ஹபரண கப்பல் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் சர்வதேசத் தொண்டர் அமைப்புக்களைச் சேர்ந்த அதிகாரிகளும் வந்துள்ளனர்.

இவர்களில் யுனிசெவ் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் வந்துள்ளனர்.

இவர்களில் யுனிசெவ் நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி பிறிட்டா ஒஸ்பேர்க், யு.எஸ்.எச்.சி.ஆர். நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பேர்னுட் டொயிலி, திரு பபீயோ பரூேலி ஆகியோர் அடங்குவர்.

இதனைவிடச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜெனிவா தலைமையகத்தின் ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி திரு. மக்ஸ் கார்டோனும் வந்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த சர்வதேச அதிகாரிகளும் இக்கப்பலில் வந்துள்ளனர். 170-ரி

# அன்ரனேவ் விபத்து விசாரணைக்கு இந்தியா, சிங்கப்பூர், ரஷ்யா தயார்

(கொழும்பு)

அன்ரனேவ் விமான விவகாரம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள இந்தியா, சிங்கப்பூர், ரஷ்யா ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன.

சிங்கப்பூர் விமான உற்பத்தி நிறுவனமும், உக்ரேயின் நிறுவனமும் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்கனவே இதுவிடயம் தொடர்பாகத் தகவல் கொடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்விவகாரத்தில் தாம் எந்த விதத்தில் உதவி வழங்க முடியும் என்பது குறித்து அறியத் தருமாறு இந்திய விமானப்படை, இலங்கையிலுள்ள தனது தூதுவராலயத்திடம் கேட்டுள்ளதாம்.

இன்னும் இரு வாரத்தில் இவ்விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமென்றும், இதற்கென இரு நீர்மூழ்கிக்கப்பல் மற்றும் தேவையான சாதனங்களை அனுப்பி வைக்கச் சிங்கப்பூர் அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

உக்ரேயினில் இருந்தும் நிபுணர் குழுவொன்று இலங்கை வர விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-ரி

# யாழ். வந்த ஐ.நா. அதிகாரிகள் அரச திணைக்களங்களுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

'ஹபரண' கப்பலில் நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்த ஐ. நா. அமைப்பை சேர்ந்த அதிகாரிகள் மூவர் யாழ். நகரில் உள்ள அரச திணைக்களங்களுக்கு விஜயம் செய்தனர்.

திருமதி பிறிட்டா ஒஸ்டேக், திரு. பேனுட் டெயிலி, திரு. பயீயோ பரூேலி ஆகிய மூவருமே அரசாங்க ஸ்தாபனங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டு அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

யாழ். செயலகத்துக்கு விஜயம் செய்து அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலத்தை சந்தித்து குடாநாட்டில் நிலவும் அத்தியாவசிய பிரச்னைகள் மற்றும் மக்களின் வாழ்க்கை நிலைமையையும் விரிவாக கேட்டறிந்தனர்.

வடபிராந்திய சுகாதார திணைக்களத்துக்கு விஜயம் செய்த இவர்கள் அங்கு சுகாதாரபணிப்பாளர் வி. சிறிகாந்தாவை சந்தித்து குடாநாட்டுமருந்து மற்றும் அத்தியாவசிய பிரச்னைகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கத்தையும் இவ் அதிகாரிகள் குழுவினர் சந்தித்து யுனிசெவ் திட்ட உதவி குறித்து பேச்சு நடாத்தியுள்ளனர்.

இவ் அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கான தமது இரண்டு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நாளை 20ம் திகதி கொழும்புக்கு திரும்புவர். 160-170-ரி

# தாய்மாருக்கு விசேஷ உணவு முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு வயதிற்கு குறைந்த குழந்தைகளையுடைய தாய்மாருக்கு விசேஷ உணவு முத்திரையை யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் வழங்கி வருகிறது.

1994 ஜூலை மாதத்தின் பிறகு பிறந்த குழந்தைகளையுடைய தாய்மார்களே இதனை பெற தகுதியானவர்கள். இதற்கான விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலகத்தில் பெற்று, குழந்தையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தோடு தாய்மாரின் 10வது சுற்று வறுமை நிவாரண முத்திரையை ஒப்படைத்து 100/- ரூபா பெறுமதியான விசேஷ முத்திரையை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிரதேசச் செயலாளர் அறிவித்துள்ளார். -ரி

# பாடசாலை உதைபந்தாட்டம் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விக்கோட்டத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மூன்று போட்டிகளின் விபரங்கள் வருமாறு: நாவாந்துறை றோமன் க. வி. எதிர் சென். சாள்ஸ் ம. வி. கொழும்புத்துறை இந்து ம. வி. எதிர் சென். ஜோசப் ம. வி. நல்லூர் விக்னேஸ்வரா எதிர் நாவாந்துறை றோ. க. வி.

கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விபரம்; வைத்தீஸ்வரா கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி, சென். ஜேம்ஸ் ம. வி. எதிர் புனித மரியாள். வி-ரி

கிரிக்கெட்:

## இலங்கை - 361

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையில் பைசலாபாத்தில் நடைபெறும் 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4ம் நாள் ஆட்டம் நேற்று முடிவடையும் போது இலங்கை தனது 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 361 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்த டி சில்வா 105 ஓட்டங்களைப் பெற்றார், பாகிஸ்தான் 2-வது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 34 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கோர் விபரம்: இலங்கை 223, 361, பாகிஸ்தான்: 333, 34-1 வி-ரி

# சித்திரவதைக் கூடமாக செயற்பட்ட பௌத்த ஆலயம்

(கொழும்பு)

தென் பகுதியில் 89 - 90 களில் மர்மமான முறையில் கடத்தப்பட்டோர் தங்காலை நகர சபை மண்டபமருகில் உள்ள பௌத்த விகாரையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், இந்த ஆலயம் ஒரு சித்திரவதைக் கூடமாக திகழ்ந்ததாகவும் தற்போது தெரியவந்துள்ளது.

தெற்கு, மேற்கு சப்பிரகமுவ பகுதியில் காணாமற்போனோர் கடத்தப்பட்டோர் பற்றி விசாரணை நடத்திவரும் ஆணைக்குழு அதன் விசாரணையை அண்மையில் தங்காலையில் நேரடியாக விசாரணை செய்தபோது இத் தகவல் தெரியவந்தது. கே-ரி

## வெளியூர் தபால்களை அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஹபரண கப்பல் மூலம் வெளியூர்களுக்கான கடிதங்களை அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையால் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு முன் யாழ்ப்பாணம் அஞ்சலகத்தினை வந்தடையக் கூடியதாக, கடிதம் அனுப்பவிருக்கும் பொது மக்கள் தங்கள் கடிதங்களை தபாலில் சேர்க்குமாறு வேண்டப்படுகின்றனர். -ரி

## புலிகளின் பலத்தை

(1ம் பக்க தொடர்ச்சி)

விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக விடுதலைப்புலிகள் பலாலி இராணுவ தளம் மீது பீரங்கி தாக்குதல் நடத்துவதாலும் கடலில் கடற்புலிகளின் பலம் ஓங்கி வருவதனையும் அடுத்தே இராணுவம் இந்தவேண்டுகோளை விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கே-ம-ரி

## வேலைநிறுத்தத்தினால்

(1ம் பக்க தொடர்ச்சி)

நடாத்தப்பட்டபோதும் சன நெருக்கம் எங்கும் காணப்பட்டதோடு, மக்கள் நீண்ட வரிசையில் நெடுநேரம் நிற்பதை காண முடிந்தது.

இதேவேளை வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்கள், புகையிரத நிலையங்கள் முன் ஆர்ப்பாட்டமும் நடத்தினர்.

நேற்று தொடங்கிய இந்த வேலை நிறுத்தம் நாளை வரை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கே-ரி

## புலிகளின் படை

[1ம் பக்கத் தொடர்ச்சி)

படைபலத்தை அறியும் நோக்கமுமேயென இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் நேற்று 'ரொய்டர்' செய்தியாளரிடம் கூறினர்.

இதேவேளை பலாலி விமான தளத்துக்கு அருகில் இராணுவம் விடுதலைப் புலிகளின் மீது கடுமையான குண்டு தாக்குதல் நிகழ்த்தியதாக எழுந்துள்ள செய்தியை இராணுவ அறிவிப்பாளர் சரத் முனசிங்க மறுத்துள்ளார்.

விடுதலைப் புலிகள் முன்னதாக பீரங்கி தாக்குதலை நடத்தியதை தொடர்ந்தே இராணுவம் விடுதலைப் புலிகளின் மீது கடும் தாக்குதல் நடத்தியதாக அவர் கூறினார்.

பலாலி விமான தளத்தின் மீதும் அதன் சுற்று வட்டாரங்களிலும் விடுதலைப் புலிகள் தாக்குதலை தொடங்கிய பின்னரே இராணுவம் விடுதலைப் புலிகளின் படை பலத்தை அளவிட்டு அறிய 'ராடர்' கருவிகளுக்கு அரசிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார். கே-ம-ரி

# வடபகுதி தாக்குதலுக்கு படையினர் 'தயார்' நிலையில்

[கொழும்பு]

வடக்கில் இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பிப்பதற்கு ஆயத்த நிலையில் இருப்பதாக வெரித்தாஸ்' தெரிவித்தது.

இதற்காக 35, 000 இராணுவத்தினர் பலாலி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைக்காக போர்தளபாடங்கள் வடக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் இருந்து இராணுவத்தினர் வடக்கு நோக்கி நகர்த்தப்பட்டுள்ளனர் ] என வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. ம-ரி]

வடக்கு-கிழக்கில்

# 407 குடும்ப நல உத்தியோகத்தர் நியமனத்திற்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரிவதற்கு 407 குடும்ப நல பயிற்சி உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வதற்கு மாகாண சுகாதார மகளிர்விவகார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விவாகமாகாத பெண்களிடம் இருந்தே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பம் ஒக்ரோபர் 20ம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் இதற்கான போட்டி பரீட்சை டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு யாழ், சுகாதார திணைக்களத்தில் வைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பத்தை பார்வையிடலாம் என்று சுகாதார பணிப்பாளர் வி. சிறிகாந்தா தெரிவித்துள்ளார். 170 - ரி

## 87 ஐரிஸ் மோனு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி பயணிகள் காரைநகர், நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வி - ரி

## திலீபன்

(1ம் பக்க தொடர்ச்சி)

யின் நினைவாக இடம்பெற்று வருகின்றன.

## நல்லூரில்

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர்.

நாட்டியம், நடனம் கோலாட்டம், பேச்சு போன்ற கலைநிகழ்ச்சிகளும் நல்லூரில் காலையில் இடம்பெற்றன. 170- 162-ரி

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த
'வேரும் விழுதுகளும்'
கல்வியியற் கண்காட்சி
இடம்: நுணுவில் கண்ணகை அம்மன் கோவிலடி
நிகழ்வு நேரம்: காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது
உள் அனுமதிக்கப்படும் இறுதி நேரம் மாலை 5-30 மணி
எங்களைத் தேடி... செல்வோமா?
செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்
(ஏ-5259)

# கமக்காரர் அடையாள அட்டை

(பண்டத்தரிப்பு)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சங்கானை வட்ட அலுவலகத்தில் கமக்காரர்களுக்கு புதிய அடையாள அட்டைகள் வழங்கும் பணி இம்மாதம் 30ம் திகதி வரை நடைபெற்று வரும் என்றும் இத் திகதிக்கு முன்னர் தங்கள் அடையாள அட்டைகளை இப்பகுதி கமக்காரர்கள் புதுப்பித்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 72

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.